**இரத்தினபுரி மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினபுரி மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளை சட்டத்தின் (252 அதிகாரம்) 219 பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான்கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் இரத்தினபுரி மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக நிர்மாண வேலைக்களிற்கான மூலதன வருமானம் ரூபா 4,190,211 தொகை ஒன்று குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக நிர்மாண வேலைக்களிற்கான கடன்கொடுனர் ஒதுக்கீடு ரூபா 1,280,000 தொகை ஒன்று குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் கணக்கினூடாக செம்மையாக்க நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | தெமுவான இரத்தினக்கல் வியாபார கட்டிடத் தொகுதியில் மீளாய்வாண்டிற்கான வாடகை வருமானம் ரூபா 930,237 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | இலங்கை போக்குவரத்து சபையின் பேரூந்து வண்டிகளிலிருந்து அறவிட வேண்டிய ஒப்பந்த கட்டணத்தை ரூபா 968,900 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் கணக்கினூடாக செம்மையாக்க நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் ஊழயிர் கடன் கணக்கின் மீதி ரூபா 58,103,614 ஆன போதும், ஊழயர் கடன் அட்டவணை பிரகாரம் அம் மீதி ரூபா 45,280,974 ஆனதில் ரூபா 12,822,640 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுகள் பிரகார மீதிகள் துணை பதிவேட்டு மீதிகளுடன் இணக்க வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571(2) | 2003 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய பொது சந்தை பிணை வைப்பு, பொது மக்கள் சந்தை பிணை வைப்பு, டென்டர் பிணை வைப்பு நானாவித வைப்புக்கள் மற்றும் வனிக இடங்களை வாடகைக்கு வழங்கும் பிணை வைப்புகளிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 20,299,136 ஆன காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணம் 571(2) பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 61,809,296 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 89,516,437 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் 450 அரச நிறுவனங்களிற்குரிய ரூபா 2,501,156 ஆன நிலுவை மற்றும் 21,983 தனியார் அலகளிற்குரிய ரூபா 36,980,737 நிலுவையுமாக 22,433 வீதவரி அலகுகளிற்குரிய 39,481,893 நிலுவை தொகையை அறவிட இயலாதிருந்தது. | வீதவரி அலகிலுள்ள 25 ஆண்டுகள் அளவு பழைய மென்பொருளினூடாக காலப் பகுப்பாய்வை பெற்றுக் கொள்ள இயலுமை இல்லை எனவும், கொரோனா தொற்றின் தாக்கம் காரணமாக வரியை உரிய முறைப்படி திரட்ட முடியாது போனதாக. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| தெமுவாவன இரத்தினக்கல் விற்பனை அறைக் கட்டிடத் தொகுதியின் கடையறைகளை குத்தகை வழங்கும் போது குறைந்தபட்ச முற்பணத்தை செலுத்தி குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடும் தேவைப்பாடு குறிப்பிடப்பட்டிந்த போதும், 10 கடையறைகளிற்காக முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திட்டிருக்கவில்லை. 2016 ஆகஸ்ட் 18 திகதிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் சபை நியமித்துள்ள குறைந்தபட்ச முற்பணத்தின் 50 சதவீத தொகையை இரண்டாம் தரப்பினரால் ஒரே தடவையில் செலுத்த வேண்டியதுடன், எஞ்சிய 50 சதவீதத்தை தவணைகளாக ஓராண்டினுள் அதாவது, 2016 ஒக்டோபர் 31 திகதியேனும் செலுத்தி முடிக்க குத்தகைதாரர் உடன்பட்டிருந்த போதும், 2021 திசெம்பர் 31 திகதியளவிலும் 10 கடையறைகளுக்கு உரிய குறைந்தபட்ச ரூபா 7,653,372 முற்பணத்தை அறவிட சபைக்கு இயலாதிருந்தது. | குறைந்தபட்ச முற்பணத்தை செலுத்தாத கடையறைகளிற்காக மாதந்தம் பணம் செலுத்தக் கூடிய வகையில் கால சட்டகமொன்றை தயாரித்து கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக. | குத்தகைதாரர்களுடன் முறையாக உடன்படிக்கை கைச்சாத்திடவும், சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக

சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**3.1 ஒப்பந்த நிர்வாக முறைபாடுகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| 2021 ஏப்ரல் 20 திகதி வேலைகளை பூர்த்தி செய்து மாநகர சபை ''புமு சபாயர்'' கருத்தரங்கு மண்டபத்தை நவீனமயமாக்கும் வேலை தொடர்பாக 2021 ஒக்டோபர் 28 திகதி கணக்காய்வின் மூலம் பௌதீக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், அங்கு வெளிப்படுத்திக் கொண்டதன் பிரகாரம் மதிப்பீட்டு விடயம் 05 இன் கீழ் மேற்கொண்டிருந்த சிவிலிம் அமைத்தல் மற்றும் பொறுத்துவதற்காக ரூபா 62,674 தொகையும், SSR-01 கீழ் மேற்கொள்ளாத வேலைகளிற்காக ரூபா 14,761 தொகையும், SSR-04 கீழ் மேற்கொள்ளாத வேலைகளிற்காக ரூபா 32,459 தொகையும், மதிப்பீட்டு விடய இலக்கம் 02 கீழ் டயில் வழங்கல் மற்றும் பரப்புவதற்காக ரூபா 50,277 தொயுமாக ரூபா 160,171 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | ஜிப்சம் சீட் சிவிலிம்களிற்கு 57.3 வர்க்க மீட்டர்களுக்காக விலைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதாகவும், வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் சிவிலிம்களின் வர்க்க அளவு 73.55 கன மீட்டர்களின் ஒரு அலகு விலை ரூபா 3,857,.42 பெருக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்திய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |